# அதிபர் புதின் மீண்டும் பதவியேற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்

மார்ச் 20, 2024

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ரஷ்ய கூட்டமைப்பின் தலைவர் திரு. விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் உரையாடினார்.

ரஷ்ய கூட்டமைப்பின் தலைவராக அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்ததோடு, ரஷ்யாவின் நட்புறவான மக்களின் அமைதி, முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

அவர்கள் இருதரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு விவகாரங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தனர். மேலும் பரஸ்பர ஆர்வமுள்ள பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

ரஷ்யா-உக்ரைன் மோதலைப் பற்றி விவாதிக்கும் போது, பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரத்திற்கு ஆதரவாக இந்தியாவின் நிலையான நிலைப்பாட்டை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்.

இரு தலைவர்களும் தொடர்பில் இருக்க ஒப்புக்கொண்டனர்.

**புது தில்லி**
**மார்ச் 20, 2024**